International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 2 April - June 2026

Published on 14, April - June 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# சுகிர்தராணி கவிதைகளில் தலித் பெண்ணியம்

**சே. ஜெயபிரகாஷ்**
முனைவர் பட்ட ஆய்வாளர்

**முனைவர் அ. கலைச்செல்வி**
இணைப்பேராசிரியர் [ம], ஆய்வு நெறியாளர், தமிழாய்வுத்துறை
திரு. ஆ. கோவிந்தசாமி அரசு கலைக் கல்லூரி
திண்டிவனம் 604 307

தமிழ் இலக்கிய மரபில் பாடுபொருளை நயம்பட எடுத்துரைக்கும் ஒரு வடிவம் கவிதை ஆகும். தற்கால எழுத்தாளர்களுள் சுகிர்தராணி ஒரு கவிஞராக, சமூகப் போராளியாக அடையாளப்படுத்துபவர். சமூகத்தில் விளிம்புநிலையில் வாழும் மக்களின், குறிப்பாகப் பெண்களின் பிரச்சினைகளுக்குத் தனது கவிதைகளின் வழி தீர்வு காண்பவர். சமகாலத்திய உயிர்ப்புள்ள கவிதைகளை உரத்த குரலில் பதிவு செய்பவர். தமிழ்ச் சூழலில் பல்வேறு வகையான பெண்ணியம் பேசப்பட்டு வருகிறது. சூழலியற் பெண்ணியம் என்பது இயற்கையைப் பெண்களுடன் தொடர்புபடுத்திப் பேசுவது. இயற்கையும் பெண்ணும் வேறுவேறு அல்ல என்கிற தத்துவத்தை உணர்த்துகிறது. உற்பத்தி சக்திகளாக (ஆக்க சக்தி) பெண்மையும் இயற் கையும் சுகிர்தராணி கவிதைகளில் ஒருசேரப் பேசப்படுகிறது. மனிதனுக்கும் சூழலுக்கும் ஆழமான உணர்வை ஏற்படுத்தும் கவிதைகள் அதிகம். இலக்கியங்களைப் பசுமை இலக்கியம் என்பர். பெண் உடல் சில கவிதைகளில் பார்க்கப்படுகிறது. எனச் சூழல்சார்ந்து பெண்களுக்கான வலிகளை சுகிர்தராணி கவிதைகளில் ஆராய்வது இக்கட்டுரையின்

### முன்னுரை

பாரதியால் துவக்கப்பட்ட நவீன கவிதை மொழி,வடிவம்,கருத்தியல் என அனைத்து பரிமாணங்களிலும் மாற்றமடைந்த ஒன்றாகும்.சங்கக் கவிதைகளிலும் பின்னர் வந்த பக்திக் கவிதைகளிலும் பெண்ணால் எழுதப்பட்ட கவிதையும் பெண்ணைப் பற்றி எழுதிய கவிதைகளும் பல உள்ளன. இருப்பினும் சமூகத்தில் பெண்ணுக்கான இருப்பு, சிக்கல், மன உணர்வுகளை வெளிப்படையாகப் பேசிய கவிதை வரலாறு ஆண்டாளின் கவிதைகளிலே முறையாகத் தொடங்கியது எனலாம். மேலும் நவீன கவிதைகளிலேயே வளர்ச்சியைக் கண்டன என குறிப்பிடலாம்.பெண்களின் எழுச்சியால் பெண்ணியச் சிந்தனைகள் உலகில் தோன்றின என்பதும், பெண்ணிய அமைப்புகளின் உருவாக்கம் மற்றும் அதன் சிந்தனை, செயல் வளர்ச்சியால் பெண்கள் அனைத்து நிலைகளிலும் வளர்ச்சியும் எழுச்சியும் பெற்றனர் என்பது எழுப்பிய சுகிர்தராணியின் கவிதைகளில் தலித் பெண்ணியம் குறித்து ஆய்வதே இவ்வாய்வின் நேக்கமாகும்.

### பெண்ணிய விளக்கம்

'Feminism' என்ற ஆங்கிலச் சொல் Femina என்ற இலத்தின் சொல்லிருந்து மருவி வந்ததாகும். Femina என்ற சொல்லுக்குப் பெண்ணின் குணாதியங்களைக் கொண்டுள்ள

என்பது பொருளாகும். 1889 வரை Woman-ism என்ற சொல் பெண்களின் உரிமைப் பிரச்சினையையும் அதன அடிப்படையிலான போராட்டத்தையும். உணர்த்தப் பயன் படுத்தப்பட்டது. 1894ஆம் ஆண்டு வெளிவந்த ஆக்ஸ்போர்ட் ஆங்கில அகராதியில் முதன் முதலில் இச்சொல் எடுத்தாளப்பட்டது. ஆக்ஸ்ஃபோர்ட் அகராதி பெண்ணியம் என்ற சொல்லுக்குப் பெண்களின் தேவையை நிறைவேற்ற அவர்கள் சார்பாக வாதாடுவது, மற்றும் போராடுவது என்ற பொருளைத் தந்துள்ளது.

### தலித் விளக்கம்

தலித் என்னும் சொல் வடமொழியிலிருந்து வந்த சொல்லாகும். தல் அல்லது தலித் என்னும் சொற்களுக்கு ஒடுக்கப்பட்ட, நசுக்கப் பட்ட, தாழ்த்தப்பட்ட, உள்ளடக்கப் பட்ட, ஆகிய பொருள்கள் உண்டு. தல் என்னும் சொல்லுக்கு வெறுமையான, சமமற்ற, வறுமையில் வாடிய, நொடிந்து போன ஏழைகள் முதலிய பொருள்கள் உண்டு.என்று ஹர்பி என் பெர்க்கின்ஸின் கருத்தை, துரைராஜ் தம் ஆய்வேட்டின் வழியில் விளக்கியுள்ளார். தலித் என்னும் சொல் ஒரு குறிப்பிட்ட சாதியைக் குறிப்பதல்ல அது சமூகப் பொருளாதார அரசியல் நிலையில் ஒடுக்கப்பட்டு உரிமைகள் மறுக்கப்பட்டு, மனிதராக மதிக்கப் பெறாத மக்களைக் குறிக்கும் சொல்லாகும்.

### தலித் பெண்ணியம் விளக்கம்

இன்றைய இந்தியப் பெண்ணியப் போக்கு களில் தலித்பெண்ணியம் மிகவும் குறிப்பிடத் தக்கது எனலாம். 1990களில் இருந்து மிகுந்த தீவரத்துடன் தலித் பெண்ணியம் பற்றிய சிந்தனைகள் இந்திய துணைக் கண்டத்தில் எதிரொலிகின்றது.தலித் பெண்கள் மீது மேல் சாதி மற்றும் அதே சமூகத்தின் ஆண்கள் ஏற்படுத்தும் பாலியல் மற்றும் தீண்டாமைக் கொடுமைகள் முற்றிலுமாக மாற்றுவதே இப்பெண்ணியத்தின் குறிக்கோள் ஆகும்.

நம் நாட்டின் தலித் இனப் பெண்கள், பிற இனப் பெண்களைக் காட்டிலும் பொருளா தாரம், கல்வி, சுற்றுப்புற விழிப்புணர்வு, உடல் நலம் பற்றிய அக்கறை எனப் பல நிலைகளிலும் தலித் பெண்கள் பின்தங்கி உள்ளனர். அவர்களைப் பாலியல் கொடுமைகளும், பலாத்காரமும், உடல் அடிப்படையிலான வன்முறைகளும் அச்சுறுத்தல்களும் நாளும் வருந்துகின்றன. இத்தகைய அடிமைத்தனத்தைப் புரிந்து கொள்ளத் தெரியாத தலித் பெண்களுக்கு அது பற்றிய விழிப்புணர்வுகள் ஊட்டி அதிலிருந்து அவர்களை மீட்டு தன்னுணர்வு களுடன் வாழத் தூண்டுவதே தலித் பெண்ணியமாகும்.

### சுகிர்தராணி கவிதைகளின் தலித் பெண்ணியம்

கத்தரிக்கப்பட்ட மயிர் என்ற கவிதையில் ஆணை குப்புற கவிழ்த்தி பெண்ணை நிலை நிறுத்தும் வரிகள் பெண் சமூகத்தின் கனல்பொறிகளாக இனங்காணத்தக்கது.இந்த நிலம் ஆறு வனாந்திரம், மொழிபனியாறு, பாலை, எரிமலை, புல்வேளி, பறவைகள், விலங்குகள், மழை, வானம் உடல் நீரூற்று, நிர்வானம், காமம், கடல் ஸர்ப்பம், பள்ளத்தாக்கு, பரிசுத்தம் எல்லாமே என்னுடையவை என்று இந்த உலகையே பெண்ணுக்கான உலகாக ஒரு தலித்துக்கான உலக மாற்றிக்காட்டுகிறார்.

**எல்லம் என்னுடையவை**

**கத்திரிக்கப்பட்ட மயிர்**

**மண்ணில் மக்குவதிலை**

மேலும் தோல் பிதுக்கப்படாத குறி என்ற கவிதையினையும் வன்புனர்ச்சிக்கு எதிராக முன்வைக்கின்றார்.இந்தியாவைப் பொறுத்தமட்டிலும் பெண்ணுக்கு எதிரான நிகழ்வு இன்று அதிகமாகிக் கொண்டே வருகின்றது. அது குழந்தைகள், முதியவர்கள் என்று வயது பாகுபாடுகளைத் தாண்டி ஆண்கள் காமவெறியற்களால் நிகழ்த்தப் பட்டிருப்பதை நாம் தினதினம் அறிந்த வண்ணம் இருக்கிறோம். ஒரு காலத்தில் கள்ளிப்பாலுக்கு இரையான பெண் குழந்தை கள் இன்று அதைவிடக் கொடுமையன பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டு பெண்கள் பலிகடாவாக்கப் படுகின்றனர்கள். இதையெல்லாம் தினம் இரண்டு பெண் குழந்தைகளுக்குத் தந்தையான ஒரு சாமான்யர் பெண் குழந்தைகள் பிறப்பது தவறா? அல்லது அவர்கள் இந்த சமுதாயத்தில் வளர்வது தவறா? என்று கேள்வி கேட்கிறார் வேதனையுடன் ஆம் அவர் சொல்வதில் உண்மை இருக்கத்தானே

செய்கிறது.

இன்றைய குழந்தைகளைப் பொறுத்தவரை ஏதோ ஒரு வகையில், பெரும்பாலும் உடல், உணர்வு பாலியல் ரீதியாக தொதரவுகளை அதிகம் சந்திக்கிறார்கள். பள்ளிகளுக்கும் மற்றும் பக்கத்துவிட்டுக்கு என சுகந்திரமாகக் கூடம் செல்ல முடியாத சுழ்நிலைகள் இன்று உருவாகி காணப்படுகிறது. என்பது சமகால சமூக நிலையைப் பிரதிபலிக்கிறது இதனையும் இதற்கான தீர்வையுமே தனது கவிதைகயில் மொழியாக்கியிருக்கிறார் சுகிர்தராணி,

**காற்று உறங்கும் நள்ளிரவு**

**அலரிப்பூக்கள் அவிழ்ந்திருக்கும் இடுகாட்டில்**

**பெண்ணுடைலைத் தோண்டியெடுத்துப் புணர்பவன்**

**சருகுகள் தேங்கும் அரவமற்ற சாலையில்**

**இறகெனப் பறக்கும்**

**மனநலம் வாய்க்காத பெண்ணொருத்தியைப்**

**புதருக்குள் வல்லுறவு செய்பவன்**

**தளிர்நடை அகலாக் குழந்தைகளைப்**

**புழங்காத அறையொன்றில்**

**வாய்பொத்தி உயிர் உறுப்பைத் தின்பவன்**

**அனைவரையும் நிவாணமாய்க்**

**கருங்கல் வெளியில் நிறுத்தியிருக்கிறேன்**

என்னும் கவிதையானது பதிவு செய்கிறது.

புயல் சின்னம் என்ற கவிதையில் தலித் பெண்களுக்கு நேரிடுகின்ற பிறச்சனையான ஒன்று பாலியல் சுரண்டல்களும், அத்துமீறல் களும், எதிர்கொண்டு பேசப்படுகிறது. கவிதையில், தன் உடலையே ஆயுதமாக்கு கிறார். மயிர்கள் சிரைக்கப் படாத தனது நிர்வாணத்தை அழிக்கப்படாத கம்பீரமாக நிறைந்த காடுகளோடு ஒப்புமைப் படுத்து கின்றார். இதனையே நாம் தலித் பெண்ணிய மொழியாக இனங்காண்கிறோம். தலித் பெண்களின் மீது நிகழ்த்தப்படுகின்ற பாலியல் சுரண்டல்கலை அடையாளப் படுத்துகின்ற போது, என் கிராமத்தின் ஓவியம் என்னும் கவிதையில் கவிஞர் தாம் அனுபவித்த, தம் மக்கள் அனுபவித்த சாதியின் வலியை எடுத்துரைக்கின்றார். பெரும் பறைக் குன்றுகள் சூழ்ந்த என் வெப்ப முற்ற நிலங்கள் புவியதிர்ச்சியின் வெடிப்பினைப் போல பிளவுற்றிருப்பதை எப்படி சகிப்பேன் என கேள்வி எழுப்பும் கவிஞர்,

**எட்டாத தொலவில் நின்று**

**பனையோலைகளில் தேநீர் அருந்துகையில்**

**உதட்டிலிருந்து வழியும் சாதியின் வலி**

**காலணிகளற்ற பாதங்களை நனைக்க**

**என் கிராமத்தின் ஓவியம்**

**தன்னைச் சட்டமிட்டுக் கொள்கிறது**

**ஒருபோதும் உறங்காத ரெட்டை வாழிடத்தில்**

என்பதாய் சாதிய ஒடுக்குமுறைகளின் அவலங்களை ஒரு சித்திரமாய் காட்சிப்படுத்துகின்றார்.

சமூகப் பார்வையில் எழுதப்பட்ட கவிதை களில் யாதும் ஊரே யாவரும் கேளிர் கவிதை மிகவும் முக்கியத்தும் பெறுகிறது. ஆனால் இன்று உலகெங்கும் அதிகாரம் என்ற ஒன்றைக் கொண்டு இயலாதவர்கள் மீது சாதி, மதம், மொழி, இனம், நிறம் என்ற பாகுபாட்டின் அடிப்படையில் வன்மத்தை அவிழ்த்து விடுகின்ற செயலைச் சுட்டுவதாக முரண்பட்ட நிலையில் கவிஞர் சுகிர்தராணி இந்த தலைப்பில் ஒரு கவிதையினை நம் பார்வைக்கு வழங்கி யுள்ளார். இது சமூக வரலாற்றின் இருள் படர்ந்த இன்னொரு முகத்தை நமக்கு காட்டுவதாக உள்ளன.

**குருதி உறைந்த வாய்க்கால்களை**

**மனிதம் வறண்ட வதைக்கூடங்களை**

**பச்சையமற்ற முகாம்களை**

**எவற்றையும் புனரமைக்கலாம்**

**இடிக்கப்பட்ட கட்டடங்களை**

**எரிக்கப்பட்ட குடில்களை**

**குண்டு துளைத்த யன்னல்களை**

**எப்போதும் அஞ்சலி செலுத்தலாம்**

**உயிர் அடங்கியபின்**

**புதைமேடுகளில் புல்முளைத்த பின்**

**எம்மொழியையும் கதைக்கலாம்**

என்பதாக சொல்லப்படும் கவிதை மொழியில் பரவிக்கிடக்கும் வன்மக்காட்சிகளை நம் கண்முன்னே விரிக்கப்படுகின்றது.

**தோலினால் அடி தைக்கப்பட்ட**

**கூடையுடன் அவள் கிளம்புகிறாள்**
**முனை மழுங்கிய இரும்புத் தகடும்**
**சேகரிக்கப்பட்ட சாம்பலும்**
**அவள் கைகளில் கனக்கின்றன**
**சாம்பலை அள்ளி உள்ளே வீசுகிறாள்**
**பின்**
**துளையின் முரட்டுப் பக்கங்களில்**
**முழுங்கை சிராய்க்க**
**இடவலமாய்க் கூட்டிக் கூட்டி**
**கூடையில் சரிக்கறாள்**
**நிரம்பிய கூடை தலையில் கனக்க**
**நெற்றியில் வழியும் மஞ்சள்நீரை**
**புறங்கையால் வழித்தபடி**
**வெகுஇயல்பாய்க் கடந்து போகிறாள்**
**அவளுக்காக என்னால் முடிந்தது**
**ஒரு வேளை மலம் கழிக்காமலிருப்பது**

தலித் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு ஆட்படுவது என்பது கன்னியாகுமரி மற்றும் காஷ்மீர் வரை அனுதினமும் நடை பெறுகின்றன. காட்டிற்குச் சுள்ளி பொறுக்கப் போகும் பெண்கள், இயற்கை உபாதைகள் கழிக்கச் செல்லும் பெண்கள் பாலியல் வன்கொடுமை செய்யப்படுதல் நாம் செய்தித்தாள்களில் அடிக்கடி படிக்கும் செய்தியாகும். பெண்களின் இந்த நிராதரவற்ற நிலையை, ஆணாதிக்கத்தின் முகவும் கொடுமையான செயலைக் கண்டித்துத் தம் வார்த்தைகளால் சாடுகிறார் சுகிர்தராணி.

## முடிவுரை

பெண்ணியம் என்பது பெண்ணின் விடுதலையும், பெண்ணுக்கான சமஉரிமையும், அதிகாரத்தைச் செலுத்தும் ஆணாதிக்கத்தைப் பற்றி பேசுவதும், செயல்படுவது மாகும். இத்தகையப் பெண்ணியச் சிந்தனைகளை கவிஞரின் மன உணர்வுக்கும், அனுபவத்திற்கும் ஏற்ப பல்வேறு நிலைகளாக பதிவு செய்யப்பட்டிருப்பதை உணர முடிகிறது.

## துணை நூற்பட்டியல்


1. இரா. பிரேமா. பெண்ணியம் அகலமும் ஆழமும். காவ்யா பதிப்பகம் சென்னை, 600 024.
2. நா. அறிவரசன், பெண்மொழி புனைவும் நீக்கமும், வெளியீடு, காவ்யா. கோடம்பக்கம் சென்னை,600 024.
3. சுகிர்தராணி, தீண்டப்படாத முத்தம். வெளியீடு, காலச்சுவடு,
4. சுகிர்தராணி, தீண்டப்படாத முத்தம். வெளியீடு, காலச்சுவடு,
5. சுகிர்தராணி, தீண்டப்படாத முத்தம். வெளியீடு, காலச்சுவடு,
6. சுகிர்தராணி, அவளை மொழிபெயர்த்தல், வெளியீடு, காலச்சுவடு,
7. சுகிர்தராணி, இரவு மிருகம். வெளியீடு, காலச்சுவடு,
8. பெண்ணியம் அகலமும் ஆழமும். பக்கம் -02
9. பெண்மொழி புனைவும் நீக்கமும். பக்கம் -08
10. தமிழ் தெலுங்கு நாவல்களில் தலித் வாழ்வியல். பக்கம் -19-20
11. சுகிர்தராணி. தீண்டப்படாத முத்தம், பக்கம் -35
12. சுகிர்தராணி.தீண்டப்படாத முத்தம். பக்கம் -48
13. சுகிர்தராணி, தீண்டப்படாத முத்தம், பக்கம் -15
14. சுகிர்தராணி, அவளை மொழிபெயர்த்தல், பக்கம் -35